IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
DEPOSITION OF WITNESS

S.C.NO.155/2025

Deposition of Witness for P.W.2

| | | |
|---|---|---|
| NAME | - | திரு.சுதாகர் |
| FATHER NAME | - | பெருமாள் |
| VILLAGE | - | ஏரியூர் |
| TALUK | - | வேலூர் |
| OCCUPATION | - | தனியார் கட்டிட பொறியாளர் |
| AGE | - | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.02.2026.

2ம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு. மற்ற எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை-</u>

நான் ஏரியூரில் குடியிருக்கிறேன். தனியார் நிறுவனத்தில் பொறியாளராக பணிபுரிகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரிலுள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. முதல் கையெழுத்து ரபீக் உடையது. 29.04.2024 அன்று காலை 04.00 மணிக்கு பெருமுகை பாரில் போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு என் முன்னிலையிலும் ரபீக் முன்னிலையிலும் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தார்கள்- அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். அந்த பார்வை மகசர் அ.த.சா.ஆ.2. அப்போது அங்கு 12 கட்டைகள் 3 கத்தி, உடைந்திருந்த 7 CCTV Camera சம்பவயிடத்திலிருந்து எங்கள் முன்னிலையில் போலீசார் மகசரில் கைப்பற்றினார்கள். அதில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம். கைப்பற்றுதல் மகசரிலுள்ள

இரண்டாவது கையெழுத்து என்னுடையது. கைப்பற்றுதல் மகசர் அ.த.சா.ஆ.3. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை- </u>எதிரிகள் தரப்பு ஆஜரான வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் Out of Station என தெரிவித்து குறுக்கு விசாரணை செய்ய இயலாது என கூறிவிட்டதால் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என அ.சா.2 சாட்சியம் முடிக்கப்பட்டது.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு இன்று 23.02.2026 தேதியில் கையெழுத்திட்டார்.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.02.24 15:06:57 +0600

Additional District Judge(FTC),
Vellore